# மனிதருக்கு தம்மை வெளிப்படுத்தும் ஆண்டவர்

எபிரெயர் 1 : 1. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், 2. இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;...

வானத்தின் மூலம் தம்முடைய மகிமையையும், ஆகாய விரிவின் மூலம் தம்முடைய கரங்களின் கிரியைகளையும் மனிதருக்கு வெளிப்படுத்தினவர், பழைய ஏற்பாட்டின் காலங்களில் தீர்க்கதரிசிகள் மூலமாய் மனிதர்களோடு இடைபட்டு தம்முடைய மனதின் எண்ணங்களை மனிதருக்கு வெளிப்படுத்தினார். இஸ்ரவேலரின் வம்சத்தில் இலட்சங்களில் ஒருவரைத் தெரிந்தெடுத்து தம்முடைய நாமத்தை அவனுக்கு வெளிப்படுத்தி தாம் செய்ய நினைக்கிறதை அந்த மனிதன் மூலமாய் வெளிப்படுத்தினார்.

## எப்படியெல்லாம் வெளிப்படுத்தினார் :

எண்ணாகமம் 12 : 6. அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். அப்படியானால் தரிசனங்களையும் சொப்பனங்களையும் அந்த தீர்க்கதரிசி தேவனிடத்தில் பெற்றுக்கொண்டு அவற்றின் மூலம் தேவனுடைய வார்த்தைகளை மனிதருக்கு அறிவிக்க வேண்டும்.

தரிசனம் என்றால் அதிலிருக்கிற ஒவ்வொரு சிறிய பொருளுக்கும் தேவனுடைய அர்த்தம் உண்டு. பொதுவாக இந்த கிருபையை உடையவர்கள் தரிசனம் வந்தபின் அதன் அர்த்தங்களுக்காக ஜெபிக்கும்போது அதன் அர்த்தங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

சொப்பனத்தின் மூலம் தொடர்ச்சியான நிகழ்வுகளாக நடக்கப்போகிற பல காரியங்களை அறிந்து கொள்கிறார்கள். யோபு 33 : 16. அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்துகிறார். கடைசி நாட்களில் யோவேல் 2 : 28. நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.

பழைய ஏற்பாட்டில் அநேக தீர்க்கதரிசிகளிடம் தேவன் பலமாய் இடைபட்டதைக் காண்கிறோம். தேவனுடைய இருதயத்திலுள்ளதை அறிந்து உணர்ந்து கொண்டவர்களில் மோசேயும் ஒருவர்.

## தரிசனம் :

யாத்திராகமம் 3 : 2. கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது. 3. அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான். 5. அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம்

பரிசுத்த பூமி என்றார். 6. பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார்.

இந்தப் பகுதியில் மோசேக்கு தேவனருளிய தரிசனத்தில் ஒவ்வொரு காரியமும் பலத்த அர்த்தங்களையும் தேவன் தாம் செய்யப் போவதை அழகாக வெளிப்படுத்துவதையும் காண்கிறோம்.

## தேவ தூதன் :

யாத்திராகமம் 23 : 20. வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். 21. அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. 22. நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன். 23. என் தூதனானவர் உனக்குமுன்சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார். இவர் இஸ்ரவேலரோடு இருந்து கானான் தேசத்தில் அவர்கள் பிரவேசிக்கும்வரை பெரிய காரியங்களைச் செய்வார் என்பதை மோசே அறிந்து கொள்ளும்படிக்கே தேவன் அந்த தூதனை அவனுக்கு காண்பித்தார்.

## முட்செடியின் நடுவில் தேவ தூதன் :

தேவதூதன் முட்செடியின் நடுவே இருந்தார் என்பது ஆபிரகாமுக்கு தேவன் முன்னுரைத்த வார்த்தைகளை மையமாகக் கொண்டே இவைகள் சம்பவித்தது என்பதைக் குறிக்கிறது. ஆதியாகமம் 15 : 13. அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். ஆபிரகாமுக்கு சொல்லப்பட்டபடியே காரியங்கள் சம்பவித்தது என்பதையும் தேவன் இந்த உபத்திரவங்களின் மையக் காரணமாகிய பார்வோனின் மேல் தாம் ஜெயம் எடுக்கப் போகிறதையும் நடுவிலே என்பதன் மூலம் அறிவிக்கிறார். நின்றார் என்பது தேவன் தீவிரமாய், உடனடியாய் விடுதலையை உண்டாக்கப்போகிறார் என்பதைக் குறிக்கிறது.

## அக்கினி ஜீவாலை :

அக்கினி ஜீவாலை என்பது தேவன் நியாயாதிபதியாய் வெளிப்படப் போவதைக் குறிக்கிறது. ஆதியாகமம் 15 : 14. இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; ஏசாயா 30 : 33 வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு; கர்த்தரின் சுவாசம் கெந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும். பொதுவாக தேவன் அக்கினியைக் குறித்து பேசும் போதெல்லாம் சுட்டெரிப்பையும், நியாயத்தீர்ப்பைக் குறிப்பதையும் காணலாம்.

## தரிசனம் :

தரிசனமானார் என்பது கர்த்தர் தன்னை வெளிப்படுத்தப்போகிறார் என்பதைக் குறிக்கிறது. யாத்திராகமம் 3 : 4. அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.

கர்த்தர் 2 முறை மோசேயைப் பெயர் சொல்லி அழைக்கிறார். பெயர் சொல்லி அழைப்பது என்பது நெருக்கமான உறவு உடையவர்கள் என்பதைக் குறிக்கிறது. 2 முறை என்பது சேஷ்டபுத்திரன் என்பதைக் குறிக்கிறது. சேஷ்டபுத்திர பாகம் என்பது என்னவென்றால் ஒரு மனிதனுடைய சொத்துக்கள் பிரிக்கப்படும்போது, எத்தனை ஆண் பிள்ளைகள் அந்த மனிதனுக்கு உண்டோ அத்தனை எண்ணிக்கையோடு ஒன்றைக் கூட்டி அத்தனைப் பங்குகளாக சொத்துக்களைப் பிரிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக அந்த மனிதனுக்கு 3 ஆண் பிள்ளைகள் என்றால் 4 பங்குகளாகப் பிரிக்க வேண்டும். அதில் 2 பங்குகளை அந்த மனிதனுடைய முதற்பேறான குமாரனுக்குக் கொடுக்க வேண்டும். மற்ற 2 பங்குகளை அடுத்த 2 குமாரருக்கு கொடுக்க வேண்டும். யாத்திராகமம் 4 : 22. அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். 23. எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; கர்த்தர் இஸ்ரவேலைத் தன் முதற்பேறான குமாரனுக்கு ஒப்பாய் நேசிப்பதைக் குறிக்கும்படிக்கே மோசேயை 2 முறை அழைக்கிறார்.

யாத்திராகமம் 3 : 4. அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான். 5. அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். இந்த இடம் உனக்கு ஆடு மேய்க்கிற இடம் ஆனால் இப்பொழுது தேவனுடைய பிரசன்னம் இங்கே இருக்கிறது. நீ என்னுடைய சத்தத்தை கேட்க வேண்டுமானால், என்னுடைய திட்டத்தை உனக்கு வெளிப்படுத்த வேண்டுமானால் உன்னுடைய பாதரட்சையைக் கழற்றிப்போடு.

6. பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான். எங்கெல்லாம் தம்முடைய பெயரைக் கர்த்தர் கூறுகிறாரோ அங்கெல்லாம் அவருடைய கரத்தின் கிரியைகள் அந்தப் பெயரைக் கொண்டே இருக்கும். மோசேயினிடத்தில் அவர் நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று சொல்லும்போது மூன்று முற்பிதாக்களுக்கும் கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிறவராகவும் அவர்களுடைய வாழ்வில் எப்படிப்பட்ட கிரியைகளை செய்தாரோ அவ்விதமாகவே இந்த காரியத்திலும் வெளிப்படுவார் என்பதை இது குறிக்கிறது. மேற்கூறியபடியே தேவனுடைய கிரியைகள் வெளிப்பட்டு இஸ்ரவேலர் விடுதலையானார்கள் என்பதை அறிந்திருக்கிறோம்.

## புதிய ஏற்பாட்டில் :

எபிரெயர் 1 : 1. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், 2. இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;

மேசியாவாகிய இயேசு கிறிஸ்து மகிமையடையும் வரை தீர்க்கதரிசிகள் மூலம் தன்னை வெளிப்படுத்தின தேவன், மகா தீர்க்கதரிசியானவரை தம்முடைய குமாரன் இயேசு கிறிஸ்து மூலம் தம்மை வெளிப்படுத்துகிறார். யோவான் 1 : 18 தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.

## இயேசு தன்னுடைய வாழ்க்கையின் மூலம் தேவனை வெளிப்படுத்தினார்

யோவான் 5 : 19. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். 20. பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்.

இயேசு உலகத்தை ஜெயித்ததின் இரகசியம் இதுவே. அவர் அடிக்கடி தேவனுடைய பாதத்திற்கு சென்ற நோக்கமும் இதுதான். ஒவ்வொரு நாளின் அதிகாலையிலே அவர் ஜெபித்த போதெல்லாம் தேவன் தன்னிடத்தில் எப்படியெல்லாம் இடைபட்டரோ அப்படியெல்லாம் அந்நாள் முழுவதும் நடந்து கொண்டார். எடுத்துக்காட்டாக தேவன் அமைதியாய் இருந்தால் தானும் அமைதியாய் இருந்தும் தன் கேள்விகளுக்கு தேவன் எந்த பாணியில் பதிலளித்தாரோ, அன்றையதினம் தன்னிடத்தில் கேள்வி கேட்டவர்களுக்கு அதே பாணியில் பதிலளித்தும் இவ்விதமாக தேவனை வெளிப்படுத்தினார். அனுதினமும் ஜெயமுள்ள வாழ்க்கை.

முக்கியமான அவர் வாழ்க்கையின் பகுதி அவர் சிலுவையில் மரித்தது. ஏன் மௌனமாகவும் பேசாமலும் இருந்தார்? பதில் கெத்சமெனே தோட்டத்தில் முதல் முறை ஜெபித்தபோது தேவன் மௌனமாயிருந்ததை உணர்ந்தார். மத்தேயு 26 : 42. அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். இப்பொழுதும் தேவன் மௌனமாயிருந்ததை உணர்ந்தார். மூன்றாம் முறை ஜெபித்தபோதும் தேவன் மௌனமாயிருந்ததை உணர்ந்தார். அவருக்கு விளங்கிற்று. தான் மௌனமாய் இந்தப் பாதையை கடந்து முடிக்க வேண்டும். மௌனமாக கடந்து வெற்றியோடு முடித்தார்.

மேலும் அவர் ஒரு தரிசனத்தைக் கண்டிருக்க வேண்டும். என்ன தரிசனம்? தேவன் பட்டயத்தை உறையிலே போடுகிறதை. பிதா செய்யக் காண்கிறதை அப்படியே செய்பவரல்லவா அதனால்தான் மேல் வீட்டறையிலே பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னவர் கெத்சமெனேயிலே பட்டயத்தை உறையிலே போடுங்கள் என்றார்.

அவர் ஜெபித்தபோது தேவன் வருவதைக் காணாமல் தேவதூதன் வருகிறதைக் காண்கிறார். அவருக்கு இன்னொன்றும் விளங்கிற்று, தேவதூதர்கள் பணிவிடை ஆவிகள். தான் பணிவிடைக்காரனைப் போல் நடந்து கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. உம்முடைய சித்தத்தின் படி செய்ய இதோ வருகிறேன் என்றவர் தன் ஜீவனைத் தான் விடும் நேரம் வரை அவ்விதமாகவே நடந்து கொண்டார். பிதா செய்ய காண்கிறது எதுவோ அதையே நான் செய்வேன் என்று அவர் தீர்மானித்திருந்தது நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது.

அப்போஸ்தலர் 2 : 22. இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக இருந்த தீர்க்கதரிசிகள் அற்புதங்களை செய்திருந்தாலும், இயேசுவை இவ்விதமாய் தேவன் பயன்படுத்தியதைப் போல வேறு எந்த தீர்க்கதரிசியையும் தேவன் பயன்படுத்தவில்லை. மத்தேயு 9 : 33. பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள். லூக்கா 24 : 19. நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.

அப்படியானால் நம்மை சுற்றி பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் தேவன் நடப்பிக்கிறதை நாம் காணும்போது அவைகளால் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

## இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் என்ன ?

லூக்கா 10 : 22. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந்தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார். யோவான் 14 : 21. என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். இவ்விதமாய் தேவனை நமக்கு வெளிப்படுத்தின நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் ஏற்றுக் கொண்டிருப்பது நமக்கு எத்தனை மேன்மை.

இறுதியாக : உபாகமம் 29 : 29. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். ஆகவே நமக்கு தன்னை வெளிப்படுத்தின நம்முடைய தேவனாகிய கர்த்தரின் வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து அவர் நாமத்திற்கே நாம் மகிமை சேர்ப்போமாக ஆமென்.